செ.வெ.எண்:358 நாள்:04.06.2018

திருநெல்வேலி மாவட்ட விவசாயிகள் மண்பரிசேதனைப்படி மண்வள அட்டைகளை பெற்று உரமிட்டு மண்வளம் காத்திட வேண்டும். மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதீஷ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

--------

"மண் பரிசோதனைப்படி உரமிட்டு மண்வளம் காப்போம், உற்பத்தியை பெருக்குவோம்"

"மண் வளத்தை காத்து உணவுதானிய உற்பத்தியை தொடர்ந்து பெருகச் செய்ய வேண்டும்" என்ற உயரிய நோக்கத்துடன் தமிழக அரசு அனைத்து விவசாயிகளுக்கும் மண் பரிசோதனை செய்து மண்வள அட்டைகள் வழங்கி வருகிறது. மண் வளத்தை பாதுகாத்து உணவு தானிய உற்பத்தி மற்றும் வருமானத்தை பெருக்கிடவும் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

உணவு தானிய உற்பத்தியை அதிகரிக்க செய்வதில் நீர்வளம், மண்வளம், மண்ணின் தன்மை ஆகியன முதன்மையான பங்கு வகிக்கின்றது. பயிர் சாகுபடியில் உயர் விளைச்சல் பெற்றிட தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல்சத்து மற்றும் நுண்ணூட்டச்சத்துக்கள் உள்ளிட்ட 20 வகையான ஊட்டச்சத்துக்கள் தேவைப்படுகின்றன.

மேற்கூறிய சத்துக்கள் சரியான அளவில் இருந்தால் மட்டுமே, நல்ல மகசூல் கிடைப்பதற்கு வாய்ப்புள்ளது. ஒரு பயிருக்கான உரத்தேவையை கணக்கிடுவதற்கு மண்ணில் உள்ள சத்துக்களின் அளவு விபரம் அறிந்திட மண் பரிசோதனை செய்வது மிக மிக அவசியமாகும். மண் பரிசோதனை மூலம் நிலத்தில் உள்ள சத்துக்களின் அளவு அறிந்து உரமிட மண்வள அட்டை திட்டம் மூலம் தற்போது விவசாயிகளுக்கு மண்வள அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றது.

மண்வள அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ள உர சிபாரிசின்படி பயிருக்குத் தேவையான உரம் இடுவதால் உரச்செலவு குறைவதோடு மண்வளமும் பாதுகாக்கப்படுகின்றது. சமச்சீரான உரம் இடுவதன் மூலம் மகசூல் கணிசமாக அதிகரிக்கிறது. இதனால், விவசாயிகளின் வருமானமும் அதிகரிக்கும். எனவே, வரும் காலங்களில் மண்வள அட்டையின் சிபாரிசின் அடிப்படையில் மட்டுமே, விவசாயிகள் விற்பனையாளர்களிடமிருந்து விற்பனை முனைய கருவி (POS) மூலம் பெற்றிட திட்டமிடப்பட்டு வருகின்றது. எனவே, வேளாண் பெருமக்கள் மண்வள அட்டையை பெற்று, அதன் பயன்பாட்டினையறிந்து மண்வள அட்டையின் அடிப்படையிலேயே உரமிட்டு, மண்வளம் காத்து அதிக மகசூல் பெற்றிட, கேட்டுக் கொள்ளப்படுகிறது. என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதீஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.